2014 டிசம்பர் 5]

நிச்சயமாக இந்தச் சாலையைப் போடுவதற்கு அனுமதி கிடைக்கும். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

29—

சுற்றுச்சூழல் பாதிப்பு

***44344—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், கோரைக்கூட்டம், மேலப்புதுக்குடி, கீழ்புதுக்குடி, பிச்சாவலசை ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதிக்கும் தனியார் இறால் பண்ணைகளைத் தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய தெய்வம், முல்லைப் பெரியாறை வென்று தமிழக விவசாயிகளின் காவல் தெய்வமாக வாழ்ந்து வருகிற கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதங்களை வணங்குகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோரைக்கூட்டம், சின்னக்கோவில், மேலப்புதுக்குடி, கீழ்புதுக்குடி, பிச்சாவலசை மற்றும் சேதுக்கரை கிராமங்களிலே செயல்படுகிற சிறிய அளவிலான இறால் பண்ணைகள் அரசுத் துறை அனுமதியில்லாமல் அவ்வப்போது இயங்கி வருகின்றன. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய்த் துறையின் மூலமாக, இப்படிப்பட்ட இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்த, மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு செயல்படுகிற மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முற்பகல் 11–25

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை பொதுவாக வானம் பார்த்த பூமி என்று சொன்னாலும்கூட, திருப்புல்லாணி ஒன்றியம் நல்ல பசுமையான பகுதி. அங்கே நெல் மட்டுமல்லாமல், மா, தென்னை, மல்லிகை, மிளகாய் செடிகளையெல்லாம் விவசாயம் செய்யக்கூடிய ஒரு சிறந்த பூமி. அதில் நான் கேள்வியில் குறிப்பிட்டிருக்கக்கூடிய பகுதிகளில், சேதுக்கரை ஊராட்சிக்குட்பட்ட அந்தப் பகுதியில் ஏராளமான இறால் பண்ணைகள் உருவாக்கப்பட்டு, அதன் காரணமாக மொத்தமாகவே குடிநீர் குடிப்பதற்குத் தகுதியில்லாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், விவசாயமும் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறது.

உத்திரகோசமங்கை ஆறு நல்ல சுவையான குடிநீரை அளித்துக் கொண்டிருந்தது. அந்த ஆறும் பாழ்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கிறோம். இந்த இறால் பண்ணைகளிலிருந்து வெளிவரக்கூடிய கழிவுநீரில் ஒரு குறிப்பிட்ட திரவம் கலந்திருப்பதன் காரணமாக மொத்தமாக சுற்றுச்சூழலுக்கு மிகப் பெரிய பாதிப்பு அங்கு ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தமாக 74 இறால் பண்ணைகள்தான் அனுமதிக்கப்பட்டவையாகும். ஆனால், 300 இறால் பண்ணைகள் சட்ட விரோதமாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கிறோம். எனவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுகுறித்து நான் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு எடுத்துச் சென்றும்கூட இதுவரை அந்த இறால் பண்ணைகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய சூழல்தான் இருந்துகொண்டிருக்கிறது. அவற்றை உடனடியாக இழுத்து மூடுவதற்கும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

2014 டிசம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஏறத்தாழ 50 முதல் 60 இறால் பண்ணைகள் அமைந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் உப்பளம் குழிகளுக்கு அருகில் அமைந்திருக்கின்றன. இவை குடியிருப்புப் பகுதிகளிலிருந்து ½ கி.மீ. முதல் 1½ கி.மீ. தொலைவில் அமைந்திருக்கின்றன. இறால் பண்ணைகள் வளர்ப்பிற்கு உப்பளங்குழிகளிலிருந்து கடல் நீரை எடுத்துக்கொண்டு, கழிவு நீரை அதே உப்பளங்குழிகளிலேயே அவர்கள் வெளியேற்றி வருகின்றனர். இதனை ஒழுங்குபடுத்துகின்றவகையில், கடந்த ஜனவரி 2014-ல் மீன் வளத் துறை, விவசாயத் துறை, வருவாய் துறை மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம்மூலம் மேற்படி கிராமங்களிலுள்ள இறால் பண்ணைகள் ஆய்வு செய்யப்பட்டன.

அதன் அடிப்படையிலே இறால் பண்ணைகள் கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் அனுமதி பெற விண்ணப்பிக்க வேண்டும் என மீன் வளத் துறையின் மூலமாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இறால் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் Chlorination மூலமாகவே வெளியேற்றப்பட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டு, மத்திய அரசின்கீழ் உள்ள கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையம்மூலம் இறால் பண்ணைகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு இறால் பண்ணைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் இறால் பண்ணைகள் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான விதிமுறைகளை மிகத் தெளிவாக வகுத்திருக்கின்றது. ஆனாலும்கூட, அந்த விதிமுறைகளை மீறக்கூடிய வகையிலே இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் கடற்கரையோரமாக

புறம்போக்கு நிலங்களில், கடலோர நிலங்களில், நீர் வள ஆதாரங்களில், கடலின் முன் பகுதிகளில் இதேபோன்று ஏராளமான இறால் பண்ணைகள் இயங்கி வருகின்றன. அரசாங்கத்தின் புறம்போக்கு நிலங்களிலும்கூட இறால் பண்ணைகள் செயல்படக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கின்றோம். எனவே, மொத்தமாக தமிழகத்தின் கடற்கரையோரங்களில், அரசு நிலங்களில் மற்றும் உப்பளங்களில்கூட அனுமதி இல்லாமல் இயங்கக்கூடிய இறால் பண்ணைகள் குறித்து ஒரு முழுமையான ஆய்வு செய்து, இந்த இறால் பண்ணைகளிலிருந்து சுற்றுச்சூழலை முற்றிலுமாகப் பாதுகாப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணைகளைப் பொறுத்தவரையில், இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்தக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் Coastal Aquaculture Authority என்று சொல்லக்கூடிய மத்திய கடல்சார் உயிரின ஆணையத்திற்கு மட்டுமே இருக்கிறது. அந்த ஆணையத்தின் விதிகளின் அடிப்படையில், 5 எக்டேருக்கு மேல் இருக்கக்கூடிய இறால் பண்ணைகளுக்கு மட்டும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசின் கடல்சார் உயிரின ஆணையம் அறிவுறுத்தியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய, 5 எக்டேருக்குக் குறைவான நிலப்பரப்பில் இருக்கக்கூடிய, அனுமதி பெறாமல் இயங்கக்கூடிய இறால் பண்ணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிவுறுத்தப்பட்டு, வருவாய்த் துறை மூலமாகவும், அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் ஒழுங்குபடுத்தக்கூடிய நடவடிக்கைகளை இன்றைக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எந்தப் பகுதியில் மாசுபடுத்தக்கூடிய அப்படிப்பட்ட அமைப்புகள் இருக்கின்றன என்று தெரிவிப்பாரேயானால், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.